பேச வேண்டும். எதற்கெடுத்தாலும் வெளியே போக வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே இவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்களே தவிர, என்ன சொன்னார்கள், என்ன நடந்தது என்று இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. யார் பெயரையும் சொல்லவில்லை என்று உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்களே சொல்லியிருக்கின்றார்கள். பெயரைக் குறிப்பிடவில்லை என்று அவரே குறிப்பிட்டிருக்கின்றார். இதை நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்களே சொல்லியிருப்பதை ஏற்று, அவர்கள் பேசியதையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று வேண்டுகோளாக வைக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் வேறு என்ன கேட்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு)

(ஆ) குறிப்பிட்ட சமூகத்தினரின் வழக்குச் சொற்களை அவையில் பயன்படுத்தியமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. சேகர், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

***திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தச் சட்டமன்றத்தில், இலங்கைப் போரில் மனித உரிமை மீறல் என்ற தலைப்பில் பேசுகின்றபோது, "அவா, அவா செய்த பாவம், அவா, அவாளுக்கே போய்ச் சேரும். நீங்கள் செய்திருந்தால் நோக்கு, நாங்கள் செய்திருந்தால் நேக்கு" என்று பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு) மற்றவர்கள் நீதித் துறையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் சமூக நீதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். இந்தச் சமுதாயத்தில் அனைத்து சமூகத்தினருக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், அந்த matter முடிந்தது. No, இது அடுத்த subject-தான்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட சாதியைப் பற்றிப் பேச்சு வழக்கில் உள்ள ஒரு

2009 ஜூலை 2] [திரு. எஸ்.வி. சேகர்]

பேச்சைப் பற்றி, கேலி பேசுவது என்பது, தமிழகத்திலுள்ள அனைத்து பிராமணர்கள் மனதை மிகவும் புண்படுத்தியிருக்கிறது என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விருப்பப்படுகின்றேன். ஏனென்றால், இந்த அரசு என்பது, அனைவருக்கும் பொதுவான ஒன்று. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நாங்களும் எல்லா வரிகளையும் கட்டிக்கொண்டிருக்கிறோம்; நாங்களும் அரசின் எல்லாச் சட்டத்தையும் மதித்துத்தான் நடக்கின்றோம் என்று சொல்கின்ற சமுதாயத்தினரைப் பழித்துப் பேசுவது தவறாக இருக்கிறது. அதேபோல், இது ஒரு நகைச்சுவைக்காகச் சொல்லப்பட்ட விஷயம் என்றால், இலங்கைத் தமிழர்கள் தினந்தினம் அங்கே செத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் செய்யக்கூடிய நகைச்சுவை அல்ல இது என்பதையும் இந்த மன்றத்திலே பதிவு செய்ய நான் விருப்பப்படுகின்றேன். ஏனென்றால் எங்களைப் பொறுத்தவரை, தமிழகத்திலே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் இந்த பிராமண சமுதாயத்தினர். அவர்களைப் பற்றி இப்படிப்பட்ட கேலி பேசுவது என்பது சரியல்ல. இந்த மொழியை, அவர்கள் வீட்டிற்குள்ளே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போய் இங்கே கேலி பேசுவது சரியல்ல.

இந்தச் சட்டமன்றம் கண்ணியமான ஒரு இடம். அனைத்துத் தரப்பினரும் இங்கே இருக்கிறார்கள். சாதி, மதம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இங்கே மக்களின் குறைகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, தயவுசெய்து இனிமேல் இப்படிப்பட்ட பேச்சுக்கள் இங்கே இடம்பெறக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் பதிவு செய்ய விருப்பப்படுகின்றேன். அதேசமயம், இதனை என்னை இங்கே பேசச் சொல்லி, ஆயிரக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் எனக்கு வந்தன. குறிப்பாக, மயிலாப்பூர், தி.நகர், தென்சென்னை பிராமணர்கள், திருச்சி, ஸ்ரீரங்கம் பிராமணர்கள், கும்பகோணத்தை உள்ளடக்கிய மாயவரம் பிராமணர்கள் போன்றோர் என்னைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு சொன்னார்கள். ஆகவே, என்னுடைய சமூகத்தினுடைய கருத்தை இங்கே பதிவு செய்ய விருப்பப்படுகின்றேன். நான் 51 முறை இரத்த தானம் செய்தவன். அனைத்து சாதி மதத்தினருக்கும் சேர்த்துக் கொடுத்தவன். ஆகவே, எங்களைப் பொறுத்தவரை எல்லோருமே சமம். இறைவனுக்கு முன்னால் அனைவரும் சமம் என்ற ஒரேயொரு வாதத்தைத்தான்

இங்கே வைக்கிறேன். இங்கேயிருக்கும் அனைவரையும் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். யாரைப் பற்றியும் தாழ்வாகப் பேசிவிடாதீர்கள். கடவுளின் முன்னிலையில் எல்லோருமே உயர்ந்தவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அதனுடைய அடையாளமாகத்தான் இன்று நான் கறுப்புச் சட்டை அணிந்து வந்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்ப்பாக, தீக்குளிக்க பெட்ரோல் ஊற்றிக் கொள்ள வேண்டுமென்றாலும், அதுவும் கூடுதலாக நான்கு ரூபாய் விலையேறி இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் . . . இதையும் பதிவு செய்ய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

(அ) சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியை மத்திய அமைச்சர் ஒருவர் மிரட்டியதாக வந்துள்ள செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியைப் பொறுத்தளவில், திரு. கோ.க. மணி அவர்கள் ஏற்கெனவே பேசிவிட்டார்கள். மீண்டும், மீண்டும் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் குறித்துப் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுவதால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள்தான் வல்லடி வம்பு. இவர்கள் கொஞ்சம் argument-ஆகப் பேசுகிறவர்கள், கம்யூனிஸ்டு. இவர்களுமா?

2009 ஜூலை 2]

(ஆ) குறிப்பிட்ட சமூகத்தினரின் வழக்குச் சொற்களை அவையில் பயன்படுத்தியமை—தொடர்ச்சி

திரு. வை. சிவபுண்ணியம்: திராவிடக் கொள்கைக்கே வேட்டு வைக்கின்ற வகையிலே எஸ்.வி. சேகர் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். அதை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்!

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 10-55

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இரண்டு பிரச்சினைகளை அந்தந்தக் கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். ஒன்று, எஸ்.வி. சேகர் அவர்கள் ஏற்கெனவே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நேற்றையதினம் இங்கே பேசிய அந்தப் பேச்சில் சில வார்த்தைகள், சில சொற்கள், ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பேசுகிற அந்த வழக்குச் சொற்களாக இருக்கிற காரணத்தால், அவர்கள் மனம் புண்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொன்னார்கள். எடுத்துச்சொல்லிவிட்டு, அவரே அதற்கான முடிவும்கூட தன் பேச்சிலேயே தெரிவித்துவிட்டார். யாரும், அப்படி யாரையும் கேலி செய்யக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே எந்த மாறுபாடும் எனக்குக் கிடையாது. ஆனால், ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுடைய பெயரைச் சொல்லி, அவர்கள் பேசுவதைப்போல என்ற ஒரு கருத்து அதிலே வருமானால் அப்பொழுதுதான் அதை எடுத்துக்கொள்ளலாமே தவிர, ஒரு வழக்காற்றிலே அவரவர்கள் ஏதேனும் ஒரு காரணத்தால் அப்படிப் பேசிப் பழகிய ஒரு சொல்லைச் சொன்ன காரணத்தாலேயே, ஒரு தெலுங்குச் சொல்லையோ, ஒரு மலையாளச் சொல்லையோ அல்லது ஒரு இந்திச் சொல்லையோ சொல்லிப் பேசிய ஒரே ஒரு காரணத்தால், அதற்காக இந்த அவையிலே உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லது அவை சார்பாக அவைத் தலைவர் அவர்களோ, நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்படாது. ஆனால், யாரையும் புண்படுத்தி யார் பேசியிருந்தாலும், அது உள்ளபடியே வருந்தத்தக்கதுதான் என்று நான் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.